பேசப்போகிறோம். இங்கே அவையிலே வரக்கூடிய வாய்ப்பை இழந்துவிட்ட காரணத்தாலே, வெளியே தெரியாமல் போகாது. இப்படி நாங்கள் இருக்கக்கூடாது, எல்லோரும் வெளியே போங்கள் என்று அவர்கள் சொன்னால், அடுத்த தேர்தலில் அவர்கள் எத்தனை பேர் வரப்போகிறார்கள் என்று மட்டும் கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

(6) அரசினர் தீர்மானம்.

பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பேரவைத் துணைத் தலைவர் அவர்களை துணைத் தலைவர் பதவியிலிருந்து நீக்கக்கோரும் தீர்மானத்தை 12—3—1974 அன்று எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற தீர்மானத்திற்கு மாறாக, அலுவல் ஆய்வுக்குழுவின் பரிந்துரையின்படி 9—3—1974-ம் நாள் சனிக்கிழமை காலை 10-00 மணி முதல் 12.00 மணி வரை எடுத்துக் கொள்ளவேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(5) 1974-75-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

திரு. வை. பாலசுந்தரம்: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நம்முடைய அரசு கொண்டு வந்திருக்கும் இந்த நிதிநிலை அறிக்கையை நான் மனமார வரவேற்று சில கருத்துக்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம், நம்முடைய அரசு நாட்டுக்குத் தேவையான, நாட்டு மக்களுக்குத் தேவையான நல்லதொரு நிதிநிலை அறிக்கையை இங்கே சமர்ப்பித்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கிறபொழுது, உள்ளபடியே, இந்த நாட்டிலே நல்லெண்ணம் படைத்த மக்களெல்லாம் இந்த ஆட்சியை நிச்சயமாக வாழ்த்தாமல் இல்லையென்பதை நான் மனப்பூர்வமாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.